அமைத்தால் நான் குறிப்பிட்ட இந்த இடங்கள் எல்லாம் பொதுமக்களால் பயன்படுத்தப்பட முடியாத அளவுக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடும் என்பதால், கோயில் புறம்போக்கு நிலத்தை வனத்துறைக்கு ஒப்படைக்க இந்து சமய அறநிலையத்துறை விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே அந்த இடத்தில் உள்ள மயில்களைப் பாதுகாக்க, அவைகளைப் பராமரித்தாலே போதுமானது. எனவே இந்த ஆண்டு மயில்கள் சரணாலயம் அமைக்காமலேயே அந்தப் பகுதியில் மயில்களைப் பாதுகாக்க *0.25* இலட்சம் கேட்டு நம்முடைய வனத்துறை ஒரு செயற்குறிப்பைத் தயாரித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *95*, திரு. உ. பலராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

95—

சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பதவிக்கு நியமனம்

44547—திரு. உ. பலராமன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எப்பொழுது பணியில் அமர்த்தப்படுவார்.?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விரைவில் பணியில் அமர்த்தப்படுவார்.

திரு. உ. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு, டாக்டர் ராகவன் என்பவரை முதல்வராக்குவதற்காக அந்தக் கல்லூரியின் கமிட்டி சிபாரிசு செய்து கல்லூரித் துறை ஆணையரும் அதற்கு ஒப்புதல் தந்து, அதை மறுபடியும் திருப்பி அனுப்பி மாவட்டக் கல்வி அலுவலர் ஒப்புதல் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டு, அதையும் பூர்த்தி செய்தும், இதுவரை அவர் அந்தப் பதவியில் நியமிக்கப்படாமல் இருக்கிறாரே, அவரை உடனடியாக அங்கே நியமிக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் *10*]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்குவதற்கு அரசு ஏற்பாட்டைச் செய்யும். சில நிர்வாகக் காரணங்கள் காரணமாகத்தான் அவர் மீண்டும் பழைய கல்லூரியிலேயே பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்று அறக்கட்டளைச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இப்போது ஒப்புதல் வந்துவிட்டதாகச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். எனவே இது குறித்து ஆணைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *96*, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

96—

தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியை நிர்ணயித்தல்.

***16445*—திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலியை நிர்ணயிக்கக் கோரி அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெருமளவில் வறுமைக் கோட்டின் கீழே இருக்கிறவர்களும், அரிசன மக்களும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஊர் பெரிதாக இருந்தால் கூலி குறைவாகக் கொடுக்கிறார்கள். காலனிகாரர்கள் அதிகமாக அந்தப் பகுதியில் இருந்தால் தினக்கூலி உயர்வாகக் கிடைக்கிறது. நகரத்தின் பக்கத்திலே இருப்பவர்களுக்கு ஒருவிதமாகத் தினக் கூலி கிடைக்கிறது.